# நிதி நிலை அறிக்கை

# 2002 - 2003

நிதி மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

**திரு. சி. பொன்னையன்**

அவர்கள் ஆற்றிய உரை

*பங்குனி 13, திருவள்ளுவர் ஆண்டு 2033*

*2002ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ஆம் நாள்*

**தமிழக அரசின் நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள், 2001–2002 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2002–2003 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தையும், 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன்வைத்து ஆற்றும் உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாடு அரசின் நடப்பாண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2002–2003 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தையும் இம் மாமன்றத்தின் முன் வைப்பதை பெரும் வாய்ப்பாக நான் கருதுகிறேன். தொலைநோக்குச் சிந்தனையுள்ள எங்கள் தலைவி, புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வேகமும், விவேகமும், ஆற்றலும் நிறைந்த தலைமையின்கீழ் செயல்படும் எங்கள் இயக்கம் தனது கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களின் அடிப்படையில் தமிழக மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெற்றுள்ளது. இக்கொள்கைகளும் செயல் திட்டங்களும் ஏழு மாதங்களுக்கு முன்னர் இப்பேரவையில் வைக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. ஒளிவு மறைவற்ற நிதி நிர்வாகம் மற்றும் வெளிப்படையான ஆட்சி முறை அமையவேண்டுமென்ற எங்களது உறுதிப்பாட்டிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் நிதிநிலை பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பட்டது. வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கைக்கு உரிய செயல்வடிவம் தரும் வகையில் அரிய ஆலோசனைகளை நல்கிய மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள், அறிஞர் பெருமக்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள், தமிழக மக்கள் ஆகிய அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. 2002–2003 ஆம் ஆண்டிற்கான இந்த வரவு–செலவுத் திட்ட உரை, கடந்தகால மரபுகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து சற்று மாறுபட்டதாக இருக்கும். வெள்ளை அறிக்கை குறித்து அரசியல் கட்சிகள், கல்வியாளர்கள், வல்லுநர்கள், வர்த்தகம் மற்றும் தொழில் சார்ந்தோர் மற்றும் ஏனைய பலரிடமிருந்து கோரிப் பெறப்பட்ட ஆலோசனைகளை உள்ளடக்கியதன்மூலம் அரசின் வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்கும் நடைமுறையை மேம்படுத்த முயன்றுள்ளோம். எனவே, மாநில அரசின் நிதிநிலைபற்றிய தெளிவான விளக்கத்துடன், அடுத்த நிதியாண்டில் அரசு மேற்கொள்ள வேண்டிய சீரமைப்பு நடவடிக்கைகள் பற்றியும், ஏற்கெனவே ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டங்கள் பற்றியும் முதற்கண் எடுத்துக் கூற விழைகிறேன்.

## நிதிநிலைமை

3. அகில இந்திய அளவில், பொருளாதார, சமூகத் துறைகளில் மிகச் சிறந்த சாதனைகளுடன், சீரிய நிதி நிருவாகம் அமைந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. எனினும், கடந்த சில ஆண்டுகளில், அரசின் நிதி நிலைமை படிப்படியாக சீர்கேடடைந்து வந்துள்ளதால், ஏற்கெனவே இருந்த கட்டுக்கோப்பான நிதிநிலை தகர்ந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

4. மத்திய நிதிப் பகிர்வுகள், மாநிலத்தின் சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் ஆகியவை உள்ளிட்ட அரசின் வருவாயினங்களின் வளர்ச்சி, 1998 ஆம் ஆண்டிலிருந்து பணியாளர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம், வட்டித் தொகை, உதவித் தொகைகள் போன்ற வருவாயினச் செலவுகளின் அபரிமிதமான வளர்ச்சிக்கு ஏற்ப அமையவில்லை. இந்தச் சமன்பாடற்ற நிலைமையைச் சமாளித்து, வருவாய்ப் பற்றாக்குறையை சரிக்கட்ட அரசு கடந்த காலத்தில் பெருமளவில் கடன் வாங்கியது. இதன் விளைவாக, வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறை நிலை பெரும் கவலை தருவதாகவும், இனியும் சமாளிக்க முடியாததாகவும் உருவாகியுள்ளது.

வழங்கிடும் வகையில் நடப்பு ஆண்டுத் திருத்த மதிப்பீடுகளில் ரூ.150 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

110. திறமை மற்றும் அறிவு ஆற்றலைத் தொடர்ந்து உயர்த்துவதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நம் மாநில அலுவலர்கள் சிறப்புப் பயிற்சிகளையும், உயர் கல்வியையும் உள்நாட்டிலேயே பெறுவதற்காக ரூ.1 கோடி ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

## நிதி நிலைமை கணிப்புகள்(Fiscal Projections)

111. 2002-2003 ஆம் ஆண்டில் மாநில அரசின் மொத்த வருவாய்ச் செலவு ரூ.26861.54 கோடி என்றும், வருவாய் வரவுகள் ரூ.20628.32 கோடி எனவும் இதன் விளைவாக, வருவாய் பற்றாக்குறை ரூ.6233.22 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மாநில அரசின் நிதிப்பற்றாக்குறை ரூ.8895.04 கோடியாக இருக்கும்.

112. 2002–2003 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ.1330.24 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நிதி மற்றும் நிதிநிலைப் பிரச்சினைகளிலிருந்து மாநில அரசு மீள நடைமுறைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நான் குறிப்பிட்டுள்ள சீரிய நிதிச்சீர்திருத்தத் திட்டம், உதவிகரமாக அமையும். அடுத்த நிதியாண்டிற்கான வரி விதிப்புச் செயற் குறிப்புகளை இப்பேரவையில் வைக்க விழைகிறேன்.

## வணிக வரிகள்

113. 2001ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இந்த சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில், தமிழக அரசின் சொந்த நிதி வருவாயில் 66 விழுக்காடு வணிகவரி மூலம் பெறப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2001-2002ஆம் நிதியாண்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு இத்தகைய வருவாய் இனங்களின்

வளர்ச்சியை பாதித்துள்ளது. இத்தகைய பின்னடைவில், உடனடியாக மாற்றம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இல்லாததால், எதிர்நோக்கும் கூடுதல் நிதிப் பற்றாக்குறை, நிதி நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

**114.** கடந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில், மதிப்புக் கூட்டு வரி முறையினை செயல்படுத்தும்போது எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை விரிவான ஆய்வு செய்ய இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போதுள்ள நிலவரப்படி, நாடு முழுவதுமாக **1.4.2003** முதல் மதிப்புக்கூட்டுவரி முறை அமல்படுத்தப்படவிருக்கிறது. மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் முடிவு செய்யப்பட்ட வழிமுறைகளின்படி, வணிகவரி ஆணையர் அலுவலகத்தின் இணைய தளத்தில் (website), மதிப்புக் கூட்டுவரி செயல்படுத்தல் குறித்த ஆலோசனைகளை வழங்கக் கோரி ஒரு 'விவாதக் குறிப்பு' வைக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டுவரியினை நன்முறையில் செயல்படுத்துவதற்கு, புள்ளி விவரங்களை அனுப்புவதற்குத் தேவையான திறன் கொண்ட முழுமையான கணினிமயமாக்குதல் அவசியம். ஆகவே வணிக வரித் துறையினை கணினிமயமாக்குவதற்கான ஒரு விரிவான திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**115.** எனவே 2002–2003 நிதியாண்டிற்கான புதிய வரிவிதிப்பு திட்டங்களை முடிவு செய்யும்போது, பொருளாதாரப் பின்னடைவினால் ஏற்பட்ட வருவாய் வளர்ச்சிச் சரிவினை ஈடுகட்ட கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதையும், அடுத்த நிதியாண்டில் மதிப்புக் கூட்டுவரித் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய முன் ஏற்பாடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இந்த அடிப்படையிலேயே, தொழில் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து பல்வேறு காலக்கட்டங்களில் பெறப்பட்ட கருத்துக்களும், **18.1.2002** அன்று நடத்தப்பட்ட நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையிலான வரிவிதிப்புகள் பற்றிய விவரங்களை, நான் அளிக்க விழைகின்றேன்.

**116.** மதிப்புக் கூட்டுவரி முறையின்கீழ், பின்வரும் பொருட்கள் தவிர்த்து, ஏனைய பொருட்கள் மீது மூன்று விதமான விகிதங்களில் வரிவிதிக்க நேரிடும்.

- வரிவிலக்கிற்குரிய பொருட்கள்
- மதிப்புக் கூட்டு வரிக்குட்படாத பொருட்கள்
- சரியீட்டுக் கொள்கைக்கு (set-off) உட்படாத பொருட்கள்

ஒருசில பொருட்களுக்கு சிறப்புக் கூடுதல் வரி (SAT) விதிக்கப்படுவதற்குட்பட்டு. இந்த வரிவிகிதங்கள் குறிப்பிட்ட **1** விழுக்காடு, **4** விழுக்காடு மற்றும் வருவாய் சமநிலை வரிவிகிதம் (RNR) என்ற அளவில் இருக்கும். வருவாய் சமநிலை விகிதம் **12** விழுக்காடு அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் இருக்கக் கூடும். எனவே தற்போது வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலை சீராய்வு செய்ய வேண்டிய தேவையேற்பட்டுள்ளதோடு, தற்போதுள்ள **8** விழுக்காடு வரிவிகிதத்திலிருந்து வருவாய் சமநிலை வரிவிகிதத்திற்கு அடுத்த ஓராண்டிற்குள் வர நாம் தயாராக வேண்டிய நிலையும் எழுந்துள்ளது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழுள்ள அட்டவணைகள் (Schedules) மற்றும் பகுதிகளைச் (Parts) சீரமைக்கும் நோக்கில், இச்சட்டத்திலுள்ள அட்டவணைகள் (Schedules) மற்றும் பகுதிகளில் (Parts) குறிப்பிட்டுள்ள பதிவுத் தொகுதிகளை (grouping of entries), மறு ஆய்வு செய்து, தற்போதுள்ள நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பதிவுகள், முந்நூறுக்கும் கீழே குறைக்கப்படுகின்றன.

117. எனவே, தற்போதைய 8 விழுக்காடு வரி விதிப்பிற்குரிய பொருட்கள் பிரித்தெடுக்கப்பட்டு, அவற்றை 4 விழுக்காடு, 10 விழுக்காடு, மற்றும் 12 விழுக்காடு கொண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்லக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959ன் கீழ் ஒரு புதிய அட்டவணையினை ஏற்படுத்தி, அதில், பெட்ரோலியப் பொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், வெளிநாட்டு மதுவகைகள், கரும்பு, புகையிலை இல்லாத பான் மசாலா, சர்க்கரைக் கழிவு, 12 விழுக்காடு மற்றும் 16 விழுக்காடு வரி விகிதத்தைக் கொண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு பொருட்களுக்கு இணையான வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் ஆகியவை கொண்டு வரப்படும். இது தவிர, 1 விழுக்காடு வரி விதிப்பிற்குரிய அட்டவணை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன்கீழ் தங்கம், வெள்ளிப் பாளங்கள் ஆகியவையும் மற்றும் பயனற்ற அல்லது தட்டிய நகைகளும் கொண்டுவரப்படும்.

118. பல மாநிலங்களில் அரிசி, கோதுமை, வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் மீது வரி விதிக்கப்படுகிறது. வரி ஆதாரங்களைப் பெருக்கும்வகையில், இந்தப் பொருட்களின்மீது நமது மாநிலத்தில் அளிக்கப்பட்டுள்ள வரிவிலக்கை மறுஆய்வு செய்ய கருதப்பட்டது. அரிசி மற்றும் கோதுமையின் முதற்கட்ட விற்பனைமீது, குறைந்த வரியாக 2 விழுக்காடு விதிக்கக் கருதப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமைக்கு வரிவிதிக்கப்பட மாட்டாது. வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் ஆகியவை மீது கூடுதல் விற்பனைவரி விதிக்கப்படமாட்டாது. கொப்பரைத் தேங்காய்மீது வெளிமாநில விற்பனையின்போது விதிக்கப்பட்டு வரும் 1 விழுக்காடு வரி, 2 விழுக்காடு வரியாக உயர்த்தப்படும். தற்போது வரிவிலக்கு பெற்றுள்ள சித்தா மற்றும் யுனானி மருந்துகள் மீது, ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கு விதிக்கப்படுவது போல 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

119. வரிவிலக்கு அளிக்கப்பட்ட மற்றும் 4 விழுக்காடு வரிவிதிப்பிற்குரிய பொருட்களை சீராய்வு செய்ததின் தொடர்ச்சியாக,

சாம்பிராணி (Gum Benzoin) மற்றும் உடனடி சாம்பிராணிமீது, கற்பூரம் மற்றும் ஊதுவத்திகளுக்கு விதிக்கப்படுவது போல 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும். தைக்கப்பட்ட கைக்குட்டைகள் மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும். அதிகபட்ச சில்லரை விற்பனை விலை ரூபாய் நூறுக்குக் குறைவாக உள்ள காலணிகள்மீது வரிவிலக்கு தொடர்ந்து இருக்கும். ஆனால், ஆண்டுக்கு ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மேல் விற்றுமுதல் (turnover) உள்ள வணிகர்களால் விற்கப்படும் காலணிப் பட்டிகள் மீது, காலணி விற்பனை மீது விதிக்கப்படும் 10 விழுக்காடு வரியே விதிக்கப்படும். சூரிய சக்தியால் இயங்கும் சமையற் கருவிகள், நகர கழிவுகளை எரிசக்தியாக மாற்றியமைக்கும் சாதனங்கள், எரிசக்தி சேமிக்கும் அடுப்புகள் (chulas) ஆகியவை மீதுள்ள வரிவிலக்கு தொடரும். இதர மீள்சக்தி சேமிப்புக் கருவிகள் (renewable energy conservation devices) மீது 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும். துணிக் கழிவுகளை, பருத்திக் கழிவு மற்றும் இதரக் கழிவுகள் என்ற வகையோடு சேர்த்து, அவற்றின்மீது 4 விழுக்காடு விரிவிதிக்கப்படும். பருத்திக் கொட்டைப் பொட்டு, நெல் உமி என்ற வகையோடு சேர்க்கப்பட்டு, அதற்கு வரிவிலக்கு அளிக்கப்படும். வேப்பம் பிண்ணாக்கு, ஒரு பூசணக் கொல்லி (fungicide) என்பதால், இதற்கு வரிவிலக்கு அளிக்கப்படும். தற்போது 4 விழுக்காடு வரிவிதிக்கப்பட்டு வரும் இரப்பர் விளையாட்டு பலூன்கள் மற்றும் மீன்பிடி வலைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். மேலும் தற்போது 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வரும் உடற்கட்டமைப்புக்கான சாதனங்கள் உள்ளடக்கிய உடற்பயிற்சிப் பொருட்கள் மற்றும் சாதனங்கள், எண்ணெய் ஒட்டாத பாத்திரங்கள் மற்றும் தொலைக்காட்சி வானலை வாங்கிகள் (antennas) ஆகியவற்றின் மீது 12 விழுக்காடு வரி விதிக்கப்படும். தேங்காய்த் துருவல்கள் (Desiceated coconuts) மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

120. எட்டு விழுக்காடு வரி விதிப்புப் பகுதியினைப் பிரித்தமைக்கும்போது, பின்வரும் பொருட்களின் மீதான வரிவிகிதம் 4 விழுக்காடாகக் குறைக்கப்படும் :

மூங்கில், புட்டி மூடிகள், வணிகச் சின்னமிடாத மிட்டாய்கள் மற்றும் தின்பண்டங்கள், வணிகச் சின்னமிடாத கேக் மற்றும் ஐஸ் கிரீம் உள்ளிட்ட வணிகச் சின்னமிடாத உணவுப் பொருட்கள், பருத்தி நூல் கழிவு, கைவினைப் பொருட்கள், பளிச்சீடு செய்யப்பட்ட சணற் பைகள், பனைக் கொழுப்பு அமிலம், வெளுப்புத் திரவம், உயரடர்த்தி பாலி எத்திலீன்(Poly Ethylene) மற்றும் பாலி பொரபலின்(Poly Propylene) ஆகியவற்றால் நெய்யப்பட்ட துண்டுப்பட்டைகள், மற்றும் துணி, குடைகள், தகரக் கொள்கலன்கள், இலகு மேற்கூரைத் தகடுகள், பதிவு பெறாத வணிகச் சின்னமுடைய பிஸ்கட்டுகள். மேலும், வணிகச் சின்னமிட்டு சிப்பமாக்கப்பட்ட (packed) பச்சைக் காய்கறிகள் மற்றும் வணிகச் சின்னமிடாத வெண்ணெய் ஆகியவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்படும். வீட்டு உபயோகப் பாத்திரங்கள் தவிர்த்த உலோகப் பாத்திரங்கள், அழுத்த மற்றும் சூடு எதிர்ப்புச் சமையற் பாத்திரங்கள், மின் விசிறிகள், மின்னணுவால் இயங்கும் பொருட்கள், டம்ப்பர்கள் (dumpers) மற்றும் மண்வாரி இயந்திரங்கள் ஆகியவை 12 விழுக்காட்டிற்குரிய பகுதிக்குக் கொண்டு செல்லப்படும். எஞ்சியுள்ள 8 விழுக்காட்டிற்குரிய பகுதியிலுள்ள பொருட்கள் அனைத்தும் 10 விழுக்காட்டிற்குரிய பகுதிக்குக் கொண்டு செல்லப்படும். தேயிலை, காபி மற்றும் இரப்பர் மீது உள்ள வரிவிகிதம், மலைத் தோட்டத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையினைக் கருதி, அறிவிக்கையின்படி தற்போதுள்ள வரிவிகிதத்திலேயே தொடரும்.

121. மின் மற்றும் மின்னணு பொருட்களை மறுவகைப்படுத்தும் முயற்சியை இத்தருணத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது. கணினி, மற்றும் கணினி புற உறுப்புகள், மென்பொருள், மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட மின்னணுப் பொருட்கள் மீது 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும்போது, அனைத்து மின் மற்றும் மின்னணு பாகங்கள், துணைப் பொருட்கள், மின்சக்தி மற்றும் மின்கடத்து மின்னியல் உறைகலன்கள் (power and shunt capacitors) ஆகியவை 10 விழுக்காட்டிற்குரிய விரிவான பகுதிக்கு கொண்டு செல்லப்படும். இதர மின் மற்றும் மின்னணுப் பொருட்களின்மீது 12 விழுக்காடு வரி விதிக்கப்படும். எனினும், முன்பு இந்திய அரசுத் துறையாக இருந்து தற்போது வணிகக் கழகங்களாக மாற்றப்பட்டுள்ள

நிறுவனங்களுக்கு வழங்கப்படும், தொலைதொடர்புச் சாதனங்களுக்கும், அறிவிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும் 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

122. தற்போது 12 விழுக்காட்டில் வரிவிதிக்கப்படும் பொருட்களை சீராய்வு செய்தபோது., மென்பானங்கள் உள்ளிட்ட கரியமிலவாயு கலந்த நீர்மீது அதிகபட்ச சில்லறை விற்பனைத் தொகை அடிப்படையில் விதிக்கப்படும் மாறுபட்ட வரிமுறையினை நீக்கிட முடிவு செய்யப்படுகிறது. வணிகச் சின்னமுடைய பழச்சாறுகள், மற்றும் பழப்பானங்கள் ஆகியவற்றுக்கு 12 விழுக்காட்டிலேயே வரிவிதிக்கப்படும். பதிவு பெற்ற வணிகச் சின்னமுடைய கரியமிலவாயு கலந்த அனைத்து மென்பானங்கள், ஏனைய பதிவு பெற்ற வணிகச் சின்னமுடைய உணவுப் பொருட்களுடன் சேர்க்கப்பட்டு, அதன்மீது 16 விழுக்காடு வரி விதிக்கப்படும். பதிவு பெறாத வணிகச் சின்னமுடைய வறுவல்கள் (chips) மீது 10 விழுக்காடு வரிவிதிக்கப்படும்.

123. தானியங்கிகள் மற்றும் அவற்றின் துணைப் பொருட்களை மறுவகைப்படுத்தும்போது, அனற்பொறியூட்டும் செருகிகள் (spark plug) மீது தற்போது விதிக்கப்படும் 20 விழுக்காடு வரி 12 விழுக்காடாகக் குறைக்கப்படும். ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் மீது தற்போது விதிக்கப்படும் 16 விழுக்காடு வரி, 12 விழுக்காடாகக் குறைக்கப்படும். 12 மற்றும் 16 விழுக்காடு வரி விதிப்பிற்குரிய பகுதிகளில் குறிப்பிட்டுள்ள பொருட்கள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விற்கப்படும்போது அவற்றின்மீது 20 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

124. மாநிலத்திற்குக் கிடைக்கப்பெறும் வருவாயில், பெட்ரோலியப் பொருட்கள்மீது விதிக்கப்படும் வரியின்மூலம் கிடைக்கும் வருவாய் பெருமளவில் உள்ளது. எனவே, பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணய அமைப்பு (Administered Price Mechanism) கலைக்கப்பட இருப்பதால், அதன் விளைவுகளைத் தக்க முறையில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**ஆண்டுக்கு 10 இலட்சம் முதல் 25 இலட்சம் வரை விற்றுமுதல் தொகை கொண்டுள்ள உணவு விடுதிகள் மீது ஆண்டிற்கு ரூபாய் 12,000 விதிக்கப்படும் வகையில் கூடுதலாக ஒரு இணக்க விகிதவரி (Compounding tax rate) அறிமுகப்படுத்தப்படும்.**

125. 1996 முதல் 2001ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், முந்தைய அரசின் தவறான கொள்கையால் தத்தளிக்கும் தொழில் நிறுவனங்களுக்கு, குறிப்பாக சிறுதொழில் நிறுவனங்களுக்கு, புத்துயிர் அளிக்கும் வகையில் இந்த அரசு சிறப்பு முயற்சிகள் பலவற்றை எடுத்து வருகிறது. இந்த அரசினால் இதுகாறும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு வலுவூட்டி, மேலும் சலுகைகளை வழங்குவதன்மூலம், தொழில் வளர்ச்சியும், அதற்கேற்ப வருவாய் வளர்ச்சியும் ஒருசேர அமையும் நிலை உருவாக்கப்படும். **கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு, மோட்டார் ஸ்பிரிட், டீசல் மற்றும் சிமெண்ட் நீங்கலான பொருட்களை இந்த மாநிலத்தில் உள்ள வணிகர்கள் (dealers) விற்பனை செய்யும்போது, 4 விழுக்காடு சலுகைவரி விதிக்கப்படும்.**

- **தமிழ்நாடு அரசுத் துறைகள்**
- **தமிழ்நாடு மின்வாரியம்**
- **நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்**
- **தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
- **சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்**
- **மருத்துவ சேவைக் கழகம்**

- மாநில போக்குவரத்துக் கழகங்கள்

கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான டர்ன்–கீ முறையில் (turnkey) செய்யப்படும் விற்பனைக்கும் இச்சலுகையானது குறிப்பிட்ட உறுதிமொழிப் படிவத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

- தமிழ்நாடு மின்வாரியம்
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
- சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

சர்க்கரைக் கழிவினை மூலமாகக் கொண்டு மருந்து மற்றும் வேதிப் பொருட்கள் தயாரிக்கும் தமிழ்நாட்டில் உள்ள, அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படும் சர்க்கரைக் கழிவின் மீது வரி குறைக்கப்பட்டு குறிப்பிட்ட உறுதிமொழிப் படிவத்தின் அடிப்படையில் 20 விழுக்காடு வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. இதே தருணத்தில், சேலம் சேகோ சர்வ் என்ற கூட்டுறவு நிறுவனத்திற்கு கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவும், அவர்களுடைய விற்பனை மீதுள்ள பொது விற்பனை வரியினை சரிக்கட்டி 4 விழுக்காடு வரி விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறனை உபயோகித்து, அரசுக்கு கூடுதல் வரியினை ஈட்டித் தரும் வகையில், எண்ணெய் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் லூப் எண்ணெய் (Lube base oil) மீதான கொள்முதல் வரியில் 7 விழுக்காடுவரை ஈடுகட்டிக் கொள்ள

அனுமதிக்கப்படும். இரப்பர் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படும் கொள்முதல் வரியில், இயற்கை இரப்பர் மீது செலுத்தப்பட்ட மத்திய விற்பனைவரியினை ஈடுசெய்து கொள்ள அனுமதி வழங்கப்படும். சிறு தொழிலகங்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பாரபின் மெழுகிற்கு (paraffin wax) 4 விழுக்காடு வரி விதிக்கப்படும். மின் கட்டுப்பாட்டுப் பலகைகள் (electrical control panels) மூலதனப் பொருளாகக் கருதப்பட்டு அவை மீது சலுகை வரியாக 3 விழுக்காடு விதிக்கப்படும்.

126. மதிப்புக் கூட்டு வரி விதிப்பின் விளைவுகளை அறிந்துகொள்ளும்வண்ணம், வரி ஈடுகட்டும் கோட்பாட்டினை (concept of set-off) சோதனை முறையில் அறிமுகப்படுத்துவது சரியாக இருக்குமென கருதப்படுகிறது. முதற்கட்டமாக, கீழ்க்கண்ட பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தப்பட வேண்டிய தமிழ்நாடு பொது விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனைவரியில், இப்பொருட்களை தயாரிப்பதற்கான (எரிபொருள் நீங்கலான) உள்ளீட்டுப் பொருட்கள் உறுப்புகள், மற்ற உதிரிப் பாகங்களின்மீது, படிவம்–17ன்கீழ் செலுத்தியுள்ள வரியினை முழுவதுமாக அறிவிக்கப்படும் நாளிலிருந்து முழுவதுமாக ஈடுகட்டிக் கொள்ளலாம்:–

- 12 விழுக்காடு வரிக்குரிய மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், கையால் செய்யப்பட்ட சோப்புகள்

- 10 விழுக்காடு வரிக்குரியதாக உள்ள இயந்திரத்தால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள் மற்றும் காகிதங்கள்

இச்சலுகையானது, ஒப்படைப்பு விற்பனைக்கு (consignment transfers) அனுப்பப்படும் பொருட்களுக்கு வழங்கப்பட மாட்டாது என தெளிவுப்படுத்தப்படுகிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின்

விற்பனைமீது, 4 விழுக்காடு மத்திய விற்பனை வரியினை செலுத்தியுள்ள இனங்களில் மட்டும், செலுத்தப்பட்ட மத்திய விற்பனைவரியில் 50 விழுக்காடு வரை ஈடுகட்டிக் கொள்ளலாம். தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம் அல்லது மத்திய விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் சலுகை அடிப்படையில் நடைபெறும் விற்பனைகளுக்கு மேற்கூறிய ஈடுகட்டும் சலுகை கிடையாது. **மாநிலத்திலுள்ள அச்சுத் தொழிலகங்களுக்கு நிவாரணம் அளிக்கும்வகையில், இத்தொழிலகங்களால் நமது மாநிலத்தில் வாங்கப்பட்ட காகிதம் மற்றும் அச்சு மை முதல் விற்பனை மீது நேரடியாகச் செலுத்தப்பட்ட வரித் தொகையினை, அரசு அறிவிக்கும் நாளிலிருந்து ஈடுசெய்து கொள்ள வழிவகுக்கப்படும். தமிழ்நாட்டில் நடைபெறும் அச்சடிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மற்றும் ஒப்பந்தப் பணி தொடர்பான பிரச்சனைகளைக் குறைக்கும் வகையில், 3 விழுக்காடு இணக்க விகித வரி செலுத்த வழி செய்யப்படும்.** இந்த இணக்க விகித வரி இனங்களுக்கு வரி ஈடு கட்டும் சலுகை இல்லை. இந்த வரி ஈடுகட்டும் சலுகை வழங்குவதின் மூலமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 21 கோடி அளவில் வருவாய் இழப்பு இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இச்சலுகையினால் கிடைக்கும் பயனை இத்தொழிலகங்கள் நுகர்வோர்களுடன் பகிர்ந்து கொள்ளுமென அரசு நம்புகிறது. பொய்யான கோரிக்கைகளை ஏற்படுத்துதல் மூலம் இச்சலுகையினை தவறாகப் பயன்படுத்தினாலோ அல்லது சாதகமான விளைவுகள் இல்லாது போனாலோ இச்சலுகை திரும்பப் பெறப்படும்.

**127. வருவாயினை உயர்த்தவும், அதனைப் பாதுகாக்கவும் பல சட்ட மற்றும் நடைமுறை வழிகள் செயல்படுத்தப்படவுள்ளன. அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் அறிவிக்கப்பட்டுள்ள பொருட்கள்(Declared goods) நீங்கலாக அனைத்துப் பொருட்களின் மறுவிற்பனைமீது வரிவிதிக்கக் கருதப்பட்டுள்ளது. இரண்டாவது மற்றும் அடுத்துவரும் விற்பனையாளர்களின் விற்பனைமீது இவ்வரி குறைந்த அளவில் 1 விழுக்காடாக இருக்கும். இந்த நடவடிக்கையானது அரசின் வருவாயினைப் பெருக்கும்பொருட்டும், மதிப்புக் கூட்டு வரி முறையில் அனைத்து நிலை விற்பனைமீதும் வரிவிதிக்கும் நிலையை**

எதிர்கொள்ளும் வகையிலும் எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ரூபாய் 10 இலட்சத்திற்குக் குறைவாக ஆண்டு விற்றுமுதல் கொண்ட வணிகர்கள், இந்த மறுவிற்பனைமீது வரிவசூலிக்கவோ, செலுத்தவோ வேண்டியதில்லை.

**128.** கடந்த 1–12–2001 முதல் ஒரு சில பொருட்கள் மீது நுழைவுவரி விதிக்கப்பட்டது. கீழ்க்கண்ட பொருட்களை நுழைவு வரி விதிப்பிற்குரிய பொருட்களின் பட்டியலில் கூடுதலாகச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

1. மோட்டார் ஸ்பிரிட்
2. லூப்ரிகேட்டிங் ஆயில் (Lubricating oil), கிரீஸ் மற்றும் லூப் பேஸ் ஆயில் (Lube base oil)
3. பிட்டுமென்(Bitumen)
4. அலுமினியம்
5. கல்நார் சிமெண்ட் தகடுகள்
6. உயரழுத்த பாலிதீன் குருணைகள், பிவிசி ரெசின் மற்றும் பிவிசி குழாய்கள்
7. உயரழுத்த பாலி எத்திலீன் (Poly Ethylene) மற்றும் பாலி புரொபாலினால் (Poly Propylene) நெய்யப்பட்ட துணிகள்
8. சலவைக் கற்கள்(Marbles) , கருங்கல் (Granites), செராமிக் ஓடுகள்

9. பொட்டாசியம் குளோரேட், லேப் (LAB), சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, மற்றும் குளோரின்

10. சானிடரிவேர்

11. பூச்சிடப்பட்ட காகிதம், டிஷ்யூ காகிதம், எம்.ஐ.சி.ஆர் (MICR), எலக்ட்ரிகல் தர காகிதம், கிளாசின் கோப்பு அட்டைகள் (Glassine file boards) நீங்கலான, காகிதம், காகித அட்டைகள் மற்றும் செய்தித் தாள் காகிதம்.

12. கோதுமைப் பொருட்கள்

13. இரும்பு மற்றும் எஃகு

14. கம்ப்ரஸ்ஸர் மற்றும் குளிர் பதன இயந்திரங்கள், காற்று பதன இயந்திரங்கள், அவற்றின் பாகங்களும் துணைக்கருவிகளும்

15. பீடி நீங்கலான புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள்

நுழைவு வரியானது, பீடி நீங்கலாக புகையிலை மற்றும் புகையிலை பொருட்களுக்கு 10 விழுக்காடும், ஏனைய பொருட்களுக்கு தமிழ்நாடு பொதுவிற்பனைவரிச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரிவிகிதத்திலும் விதிக்கப்படும். அறிவிக்கப்பட்ட சுயேச்சையான மின் உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படும் LSHS (Low Sulphur Heavy Stock) மீது, அரசு அறிவித்த நாளிலிருந்து ஓர் ஆண்டுக்கு நுழைவு வரி 3 விழுக்காடாகக் குறைக்கப்படும்.

129. சிமெண்ட் விற்பனைவிலையில் அடிக்கடி காணப்படும் அதிகமான விலை உயர்வு அரசினையும், பொதுமக்களையும் கவலை கொள்ளச் செய்துள்ளது. **OPC மற்றும் PPC சிமெண்ட் விற்பனை விலை மூட்டைக்கு முறையே ரூ.145 மற்றும் ரூ.135க்கு மேலே இருப்பின்**

**அவ்விற்பனைமீது 24 விழுக்காடு வரிவிதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட விற்பனைவிலை விற்பனைவரியினை உள்ளடக்கியதாகும். இவ்வகையிலான சிமெண்டின், இரண்டாவது மற்றும் அதன்பின் நடைபெறும் விற்பனைமீது 5 விழுக்காடு வரிவிதிக்கப்படும். மேற்கூறப்பட்ட விற்பனை விலைக்குக் கீழே விற்கப்படும் சிமெண்ட் மீது, தற்போதுள்ள வரிவிகிதப்படி முதல் விற்பனையில் 16 விழுக்காடு வரியும், இரண்டாவது மற்றும் இதர விற்பனையில் 1 விழுக்காடு வரியும் விதிக்கப்படும். வெள்ளை சிமெண்ட் மற்றும் ரெஃப்ராக்டரி சிமெண்ட் உள்ளடக்கிய சிமெண்ட் மீதான நுழைவு வரி நீக்கப்படும். இந்த நடவடிக்கைகளால், சிமெண்ட் நியாயமான விலையில் கிடைக்க வழிவகுக்குமென நம்பப்படுகிறது.**

130. நகை மற்றும் உயர்மதிப்புக் கற்களின் வியாபார நடவடிக்கைகளில் வணிகர்கள் வரி செலுத்துவதைத் தவிர்ப்பது கணிசமான அளவில் உள்ளதால் இதனைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். **ஒவ்வொரு மாதமும் கூடுதலாக இருப்பில் சேரும், ரூபாய் 3,000க்கு மேற்பட்ட விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள பட்டுப் புடவைகளின் இருப்பு மதிப்பின்மீது, குறைந்த அளவிலான 1 விழுக்காடு ஆடம்பர வரிவிதிக்கும் வகையில் ஆடம்பர வரிச் சட்டம் திருத்தியமைக்கப்படும். விளம்பர வரிச் சட்டத்தின் நோக்கம் விரிவாக்கப்படும்.**

131. மக்களுக்குத் தரமான வாழ்க்கை வசதிகளை அளிக்கவும், வணிகம் மற்றும் தொழில்கள் சிறப்பாகச் செயல்படத் தேவையான சூழ்நிலையை உருவாக்கவும், கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிட வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. மிகவும் தேவையான இத்துறையின் வளர்ச்சிக்காக, **அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் வாயு மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்கள் (Declared Goods) தவிர்த்து ஏனைய பொருட்களின் மீது தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படும் விற்பனைவரி மீது 5 விழுக்காடு உள்கட்டமைப்பு உபவரி (Infrastructure surcharge) விதிக்கப்படும்.** இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மீதான விற்பனை வரி சமீபத்தில் 50 விழுக்காட்டிலிருந்து 55 விழுக்காடாக

உயர்த்தப்பட்டதால் இப்பொருட்களின் மீது இந்த உப வரி விதிக்கப்படமாட்டாது. இந்த உள்கட்டமைப்பு உபவரி மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 230 கோடி அளவில் வருவாய் கிடைக்குமென கருதப்படுகிறது.

**132. இவ்வகையான வரிவிதிப்பு, உபவரிவிதிப்பு மற்றும் வரிச்சலுகைகளின் விளைவாக, ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 690 கோடி அளவில் கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.**

133. பெருமளவில் விவாதத்திற்கு உள்ளாகியுள்ள வணிகவரி நிலுவை பற்றி சில கருத்துக்களைக் குறிப்பிட விழைகின்றேன். வணிகவரி நிலுவையினை வசூலித்திருந்தால் அரசின் நிதிப் பற்றாக்குறை சரி செய்யப்பட்டிருக்கும் என்பது போன்ற அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. நிலுவையாக உள்ள விற்பனைவரியில் ஏறக்குறைய 90 விழுக்காடு, கீழ்க்கண்ட பரந்த தலைப்புகளின்கீழ் வருமென நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அ. பல்வேறு நீதிமன்றங்களின்முன் நிலுவையாக உள்ள வழக்குகளினால் வசூலிக்க இயலாதவை அல்லது மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் வரிநிலுவை நீக்கம் செய்யப்பட வேண்டியவை

ஆ. மத்திய, மாநில, வருவாய் மீட்புச் சட்டங்களின்கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு நிலுவையாக உள்ளவை, வரி கைவிடுதல் மற்றும் வரி தள்ளுபடி செய்ய வேண்டியுள்ள இனங்கள், வரி செலுத்துவதைத் தள்ளிப்போடும் திட்டத்தின்கீழ் (Deferral scheme) உள்ளவை மற்றும்

தவணைமுறைச் சலுகையில் வரிசெலுத்த அனுமதிக்கப்பட்ட இனங்கள்.

1996–97ஆம் ஆண்டுமுதல் 1999–2000 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வரிநிலுவையானது சற்றேறக்குறைய மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் நிலுவையிலுள்ள வரிவிதிப்பினால் முடிக்க வேண்டுமென்ற நோக்கில் செயல்பட்டது இதற்கு ஒரு காரணமாகும். அதிக அளவில், அனுமானத்தின் அடிப்படையிலான மிகச் சிறந்த தீர்ப்பின்படி (Best of Judgment) வரிவிதிப்புகள் முடிக்கப்பட்டதால், அவற்றை எதிர்த்து வழக்குகள் பெருகிய சூழல் ஏற்பட்டது. **இந்த அரசு, நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை விரைவில் முடிக்கவும், நடைமுறை மாற்றங்களைக் கொண்டு வரவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும். புலனாய்வுப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களைப் பயன்படுத்தி, தற்போது கண்டுபிடிக்க இயலவில்லை என தெரிவிக்கப்பட்ட வணிகர்களைக் கண்டுபிடித்து அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நிர்வாகத்தைச் சீர்படுத்தும் வகையிலும், அனுமானத்தின் அடிப்படையிலான மிகச் சிறந்த தீர்ப்பின்படி (Best of Judgment) இறுதிவரிவிதிப்பு செய்வதைக் கண்காணிக்கும் வகையிலும், கடுமையான தண்டம் விதிக்கும் வகையிலும், அந்தந்த சட்டங்களில் தகுந்த திருத்தங்கள் கொண்டு வரப்படும்.**

134. பதிவுச் சான்றுக் கட்டணத்தையும், பதிவுச் சான்று புதுப்பித்தலுக்கான நாளினையும் மாற்றியமைக்க, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தில், திருத்தங்கள் செய்ய அரசு முடிவுசெய்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கு, அபராதத் தொகையின்றி ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்ளும், அபராதத் தொகையுடன் ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள்ளும் பதிவுச் சான்று புதுப்பிக்கப்பட வேண்டும்.

135. பணி ஒப்பந்தக்காரர்களின் நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும்வகையில், இந்த ஆண்டு, சோதனை

முறையில், வருவாயில் வரிப் பிடித்தம் (Tax Deduction at Source) செய்வதைக் கண்காணிக்க மையப்படுத்தப்பட்ட வட்டம் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும். இது திருப்தியளிக்கும் வகையில் செயல்பட்டால், இம்முறை மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும்.

**136. "சமாதானத் திட்டம்–2002" என்ற திட்டத்தினை மூன்று மாதங்களுக்குச் செயல் படுத்தியும், குறிப்பிட்ட வகையான வரிநிலுவைகளை முடிவு செய்ய "தீர்வாணையம்" (Settlement Commission) ஒன்றினை ஒரு குறுகிய காலத்திற்கு அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தில், வணிகர்கள் சமாதானத் திட்டத்தின்கீழ் வரும் முறையீடுகளை சமாதானத்தின்பேரில் திரும்பப் பெற்றுக் கொள்ளவும், சர்ச்சைக்குரிய தொகையில் முன்னர் செலுத்தியுள்ள தொகைகளை வரவு வைக்கவும் வழிவகுகக் கருதப்பட்டுள்ளது.**

**137. இந்த தீர்வாணையம் (Settlement Commission), 1–4–1995க்கு முன்பு வணிகத்தை நிறுத்திவிட்ட, 28–2–2002 அன்று மேல்முறையீடு ஏதும் நிலுவையில் இல்லாததுமான வணிகர்களின் வரிநிலுவை இனங்கள், 1–4–1996க்கு முன்னுள்ள பரிசுச் சீட்டு வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரி நிலுவைகள், அறிவிக்கப்பட்ட தேதியில் நிலுவையாக உள்ள, தமிழக அரசின் தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உள்ளடங்கிய மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள், மற்றும் 28.2.2002 அன்று மேல்முறையீடு நிலுவையில் இல்லாமலும், 1.4.1999க்கு முந்தைய காலத்தில் நிலுவையாகவும் உள்ள வரிநிலுவை கைவிடுதல் (waiver) கோரிக்கைகள் ஆகியவற்றை தீர்வு செய்யும்.** இந்த இனங்கள் சமாதானத் திட்டத்தின் கீழ் வராது.

**138. சுயவரிவிதிப்புக்கான தற்போதைய நடைமுறையினை அரசு ஆய்வு செய்துள்ளது.** 1999–2000ஆம் ஆண்டு முதல், ஒரு கோடி

ரூபாய் வரை விற்றுமுதல் உள்ள இனங்களில், 20 இலட்சத்திற்கு மேல் விற்றுமுதல் உள்ள வணிகர்கள், பட்டயக் கணக்கர்களின் (Chartered Accountants) சான்றிதழுடன் நமூனாவை சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஒரே நிபந்தனையுடன் கூடிய சுயவரிவிதிப்பு முறையினை முந்தைய அரசு அமைத்திருந்தது. ஏனைய மாநிலங்களில் செயல்படுத்தப்படும் சுயவரிவிதிப்பு முறையினை ஆய்வு செய்ததின்பேரிலும், சான்றிதழ் வழங்குவது தொடர்பாக பெறப்பட்ட முறையீடுகளின்பேரிலும் இந்த சுயவரி விதிப்பு முறையைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியம் எழுந்ததுள்ளது. 2001-2002 வரிவிதிப்பு ஆண்டு முதல், ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆண்டுக்கு ரூபாய் 40 இலட்சத்திற்குமேல் விற்றுமுதல் உள்ள வணிகர்களுக்கு மட்டும் பட்டயக் கணக்கர் (Chartered Accountant) அல்லது விலை மதீப்பீட்டுக் கணக்கர் ( Cost Accountant) என்பவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் தர வேண்டுமென்ற அடிப்படையில், சுயவரிவிதிப்பு முறை விரிவுபடுத்தப்படும். இந்த சுயவரிவிதிப்பு முறையானது ரூ.10 கோடி வரை விற்று முதலுள்ள வணிகர்களுக்கும், இதர நிபந்தனைகளுடன், அவர்களால் செலுத்தப்பட்ட வரியானது கடந்த ஆண்டினைவிட 15 விழுக்காடு கூடுதலாக இருக்கும்பட்சத்தில் விரிவுபடுத்தப்படும். அக்டோபர் திங்கள் 31ஆம் தேதிக்குள் ஆண்டு நமூனாவைச் சமர்ப்பிக்காத வணிகர்கள், சுயவரிவிதிப்பு முறைக்கு உரிமை கோர இயலாதவர்களாக தீர்மானிக்கப்படுவதுடன், அவர்களுடைய வரிவிதிப்பு வழக்கமான முறையில் முடிவு செய்யப்படும்.

139. 1998-1999ஆம் ஆண்டு முடிய நிலுவையிலுள்ள வரிவிதிப்புகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டுவரை நிலுவையிலுள்ள பூசலுக்குட்படாத வரிவிதிப்புகள், வணிகர்கள் அனைத்து நமூனாக்களையும், வரித் தொகையினையும், சலுகை வரிக்கான உறுதி மொழிப் படிவம் அல்லது சான்றிதழ்களையும் 30-9-2002க்கு முன் சமர்ப்பித்தால், கணக்குகள் தணிக்கையிடப்படாமலேயே, இறுதி செய்யப்படும். C மற்றும் D படிவங்களைத் தாக்கல் செய்ய இயலாத வணிகர்கள், மத்திய விற்பனைவரிச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வரிவிகிதத்திற்குமேல் 2 விழுக்காடு பிழை பொறுத்தல் கட்டணமாக செலுத்துவதுடன்,

துறையினால் கோரப்படும் மாற்று ஆவணங்களை வரிவிதிப்பினை முடிக்கும் வகையில் சமர்ப்பிக்க வேண்டும்.

140. இதுவரை நமூனாக்களை சமர்ப்பிக்காத, வரிவிதிப்பிற்கு உட்படாத வணிகர்கள், மற்றும் 2000–2001 முடிய உள்ள வரிவிதிப்பு ஆண்டுகளுக்கான ஆண்டு நமூனாக்களை சமர்ப்பிக்காதவர்கள், 30–9–2002க்குள் ஆண்டு நமூனாக்களை சமர்ப்பிக்க ஒரு சிறப்பு ஏற்பாடு செய்யப்படும். நமூனாவைச் சமர்ப்பிக்கும்படி அறிவிப்பு வழங்கிய பின்னரும், மேலே குறிப்பிட்ட தேதிக்குள் நமூனா சமர்ப்பிக்கப்படவில்லையெனில், தேவையான நடவடிக்கை எடுப்பதுடன் இவ்வணிகர்களின் பதிவுச் சான்றும் இரத்து செய்யப்படும்.

141. நீண்ட காலமாக நிலுவையாக உள்ள பிரச்சினைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு வழங்கியுள்ள நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், அரசின் வருவாயினைப் பெருக்கிட உறுதுணை நல்குமாறும் வணிகர் சமுதாயத்தினை அரசு கேட்டுக் கொள்கிறது. இந்த அரசானது சட்டவிதிமுறைகளை ஏற்று செயல்படும் வணிகர்களைக் கண்டறிந்து, வேறுபடுத்தி அவர்களை ஊக்குவிக்கவும், அவ்வாறல்லாதவர்களை நெறிப்படுத்தவும் உறுதி பூண்டுள்ளது.

142. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில், மத்திய விற்பனை வரிச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. சட்டம் அமல்படுத்தப்பட்டவுடன், உறுதி மொழிப் படிவங்கள் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். மேலும், ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்கைகளுக்கு உரிய மாற்றங்கள் செய்யப்படும்.

143. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானத்தை அருந்துவோர், தாம் அமர்ந்து உட்கொள்வதற்கேற்ற இடவசதி வேண்டும் என்று தொடர்ந்து வேண்டுகோள்விடுத்து வந்துள்ளனர். **எனவே, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளில், முறையே ரூ.3 இலட்சம், ரூ.2 இலட்சம் மற்றும் ரூ.1 இலட்சம் உரிமக்**

**கட்டண விதிப்புக்குட்பட்டு, இந்தியாவில் தயாரிகும் வெளிநாட்டு மதுபான வகைகள் விற்பனை செய்யப்படும் கடைகளில் (Bars) மது அருந்துவதற்கு தக்க இடவசதி செய்து கொடுக்க அனுமதியளிக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.**

144. மாநிலத்தில், குறிப்பாக ஊரகப் பகுதிகளில் பல உயிர்களைப் பலிகொண்ட கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதையும் உட்கொள்ளப்படுவதையும் தவிர்க்கும் எண்ணத்துடன் 1.1.2002 முதற்கொண்டு மலிவு விலை மது விற்பனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த மூன்று மாத காலத்தில் நமக்குக் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் எந்த நோக்கத்திற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை எனத் தெரிகிறது. இத்திட்டத்தினால் மாநிலத்திறிகு வெகுவான நிதி இழப்புதான் ஏற்பட்டுள்ளது. தற்போது மாநிலத்தில் உள்ள நெருக்கடியான நிதிநிலையில் எந்த ஒரு வருவாய்க் குறைவையும் ஏற்கும் நிலையில் மாநிலம் இல்லை இத்திட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. **எனவே மலிவு விலை மது விற்பனைத் திட்டத்தை 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாளிலிருந்து நிறுத்திவிடுவதென அரசு முடிவு செய்துள்ளது.** மாற்று ஏற்பாடுகள் செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை சமாளிப்பதற்காக இருவார கால அவகாசம் தேவைப்படுகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் முனைப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என அரசு உறுதியளிக்கிறது.

## நிதி நிருவாகம்

145. வரிவிதிப்பில் மேற்கொள்ள இருக்கின்ற உத்தேச மாற்றங்களைக் கணக்கில் கொண்டால், வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏற்படும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ.640.24 கோடியாகக் குறையும். வரி நிலுவைத் தொகைகள் வசூலிப்பை உயர்த்துவதன் மூலமாகவும், காலங்கடந்த, பயன் தரவியலாத